# THE COASTAL REGULATION ZONE (CRZ) NOTIFICATION 2011

## A primer for coastal fishing communities (Draft)

in Tamil



June 2011

# கடற்கரை ஒழுங்கமைவு மண்டலம் (CRZ) அறிவிக்கை 2011

# கடற்கரை வாழ் மீனவ மக்களுக்கான அரிச்சுவடி

**முன்னுரை**

2011 ஜனவரி 6 அன்று சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 2011 (இந்திய அரசாங்கம் 2011)-ஐ வெளியிட்டார். கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 1991-ஐ திருத்தியமைப்பதற்கு பல ஆண்டு காலமாக நடைபெற்ற கலந்தாலோசனைகள் முடிவுக்கு வந்தன. இந்த கலந்தாலோசனைகள் நடைபெற்றபோது, அவை மீனவ மக்கள் மத்தியிலும் சுற்றுச்சூழல் குழுக்கள் மத்தியிலும் மிக அதிக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தின.

கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 2011-ன் உள்ளடக்கம் பற்றியும் மீனவ மக்கள் அமைப்புகள் தொடர்ந்து எதிர்கொள்ளப்போகும் பிரச்சனைகள் பற்றியும் கடற்கரை உயிர்ச்சூழலைப் பாதுகாப்பதை உறுதி செய்வதற்கு அவர்கள் செய்யக் கூடியன பற்றியும் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக இந்த அரிச்சுவடி தயார் செய்யப்பட்டுள்ளது.

கடற்கரையோர மக்களுக்கு எந்த சூழலில், இந்த அறிவிக்கையின் எந்த விதிகள் சாதகமாகவும் பாதகமாகவும் செயல்படும் என்பதையும் முடிவெடுத்தல், கண்காணித்தல் மற்றும் அமுலாக்கத்தின் முக்கியமான பாத்திரத்தை மீனவ மக்கள் மேற்கொள்ள முடியும் என்பதையும் இந்த அரிச்சுவடியின் பகுதி 1 சுட்டிக்காட்டுகிறது.

2011 அறிவிக்கையின் உள்ளடக்கம் மற்றும் விதிகள் பற்றிய தகவல்களை மிகவும் எளிமையான வகையில் அரிச்சுவடியின் இரண்டாவது பகுதி (இன்னமும் தயாரிப்பு நிலையில் இருக்கிறது) அளிக்கிறது.

## *பகுதி* 1

## 1. கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 2011 என்றால் என்ன?

சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம் 1986ன் படி, கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 2011 வெளியிடப்பட்டது. நாட்டின் கடற்கரைப் பகுதிகள், 12 கடல்மைல்கள் வரையிலான நீர்ப்பகுதி (மற்றும் கடல்படுகை), இந்திய கடல் எல்லை வரையிலான கடற்பரப்பு, அலைகளின் தாக்கத்திற்கு ஆளாகும் கடற்கரை நீர்நிலைகள் ஆகியவை கடற்கரை ஒழுங்கமைவு மண்டலத்தில் அடங்கும் என்று சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம் 1986-ன் படியான கடற்கரை ஒழுங்கமைவு அறிவிக்கை 2011 பிரகடனம் செய்கிறது. இந்தப் பகுதியில் தொழிற்சாலைகள், தொழில் நடவடிக்கைகள், தொழில் இயக்கங்கள் (operations and processes) நடைபெறுவதின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 1991-ஐ அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 2011 கொண்டுவரப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டின் கடற்கரை ஒழுங்கமைவு மண்டல விதிகளுக்குக் கொண்டுவரப்பட்ட, அதனை நீர்த்துப்போகச் செய்த அனைத்து 25 திருத்தங்களும் 2011 அறிவிக்கையில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளன என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். எனவே, 2011 ஆம் ஆண்டின் அறிவிக்கை, இந்தியக் கடற்கரையைப் பாதுகாப்பது என்பதில் ஓர் அடி பின்வாங்குவது என்றே சொல்ல வேண்டும்.

அறிவிக்கையின் நோக்கங்கள் என்று சொல்லப்படுவன:

- மீனவ மக்கள் மற்றும் இதர கடற்கரை வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உத்திரவாதம் செய்வது.
- கடற்கரைப் பகுதிகள், அவற்றின் தனித்துவமான சுற்றுச்சூழல் அவற்றின் கடல் பகுதியைப் பாதுகாப்பது, மற்றும்,
- கடற்கரைப் பகுதியில் நேர வாய்ப்புள்ள இயற்கைப் பேரிடர்கள், புவி வெப்பமடைவதால் ஏற்படும் கடல் மட்ட உயர்வு போன்ற அபாயங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அறிவியல் அடிப்படையிலான நிலைத்த தன்மையுள்ளவற்றின் வாயிலாக வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வது.

2011 அறிவிக்கை கடற்கரை ஒழுங்கமைவு மண்டலத்தை 3 வகையினங்களாகப் பிரிக்கிறது: CRZ I (சுற்றுச்சூழல் அடிப்படையில் எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பகுதிகள்-(ecologically sensitive areas), CRZ-II (கட்டுமானங்கள் அடர்ந்த பகுதி), CRZ-III (கிராமப்புர பகுதிகள்) மற்றும் CRZ-IV கடலெல்லை வரையிலான நீர் பகுதிகள் மற்றும் ஓதத்தின் (Tide) தாக்கத்திற்கு ஆளாகும் கடற்கரை நீர்நிலைகளை உள்ளடக்கிய நீர் பகுதிகள்.

## 2. கடற்கரை ஒழுங்கமைவு மண்டலம் அறிவிக்கை 2011க்கும் கடற்கரை ஒழுங்கமைவு மண்டலம் அறிவிக்கை 1991க்கும் இடையிலான முக்கியமான வேறுபாடுகள் என்ன?

**கடலெல்லையையும் உள்ளடக்கியிருப்பது** : **12 கடல் மைல்கள் வரை நீளும் இந்திய எல்லைக்குட்பட்ட கடற்பரப்பு மற்றும் கடற்படுகை, அதுபோல கடல் அலையால் பாதிப்புக்கு ஆளாகும் கடற்கழிகள் (Creeks) ஆறுகள், முகத்துவாரங்கள் போன்ற நீர்நிலைகளின் நீர் பரப்பும் அவற்றின் படுகைகளும் 2011 அறிவிக்கையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.**

- தீவுகளுக்கு தனியான அறிவிக்கை: அந்தமான், நிக்கோபார், லட்சத்தீவுகள் ஆகிய தீவுப் பகுதிகளும் அந்தத் தீவுகளைச் சுற்றியுள்ள கடல் எல்லை வரையிலான கடற்பரப்பும் 2011 அறிவிக்கையின் பார்வைக்குள் வரவில்லை. இந்தப் பகுதிகளுக்காக தீவுகள் பாதுகாப்பு மண்டல அறிவிக்கையென்று தனியாக வெளியிடப்பட்டுள்ளது.

- அபாயக் கோடு **(Hazard line)**: கடல் ஓதம் (tides) அலைகள், கடல் மட்ட உயர்வு, கடற்கரை மாற்றங்கள் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கடற்கரை வாழ் மக்களின் உயிர்களை, வாழ்வாதாரங்களை, சொத்துக்களைக் காப்பது என்ற நோக்கத்திற்காக அபாயக் கோடு என்ற கருத்தாக்கம் கொண்டுவரப்பட்டது. கடற்கரை ஒழுங்கமைவு மண்டல நிர்வாக வரைபடத்தில் (CZMP) அபாயக்கோடு குறிப்பிடப்பட வேண்டும். கடல் நோக்கிய பரப்பைப் பொறுத்த வரை அபாயக் கோட்டுக்கும் உயரலைக் கோட்டிலிருந்து 500 மீட்டர் வரையிலான நிலம் நோக்கிய பரப்பும், கடலோதத்தால் பாதிப்புக்கு ஆளாகும் நீர்நிலைகளைப் பொறுத்தவரை அபாயக் கோட்டுக்கும் 100 மீட்டர் கோட்டுக்கும் இடைப்பட்ட நிலப் பகுதியும் கடற்கரை ஒழுங்கமைவு மண்டலத்திற்குள் வரும் என அறிவிக்கை சொல்கிறது. இதன் பொருள் சில

பகுதிகளில் CRZ பகுதிகள் 500 மீட்டர் கடற்கரைப் பகுதிக்கும் (ஓதத்தால் பாதிக்கப்படும் நீர்நிலைகளைப் பொறுத்தவரை 100 மீட்டர் பரப்பு) நீடிக்கும் என்பதாகும்.

- சிறப்புக் கவனம் தேவைப்படும் பகுதிகள்: முழு இந்தியக் கடற்பகுதிக்கும் ஒரே மாதியான கட்டுப்பாடுகள் கொண்டதாக 1991ஆம் ஆண்டின் அறிவிக்கை இருந்தது. சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைக் கவனத்தில் கொண்டு சிறப்பு விதிவிலக்குள் சிலவற்றை மகா மும்பை, கேரளா மற்றும் கோவுக்கு 2011 அறிவிக்கை அளித்துள்ளது.

  மேற்கு வங்கத்தின் சுந்தரவனம் மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம் 1986க் கீழ் இனம் காணப்பட்ட இதர சுற்றுச்சூழல் ரீதியாக எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பகுதிகளுக்குப் பொருத்துவதற்காக 'மோசமான பாதிப்புகளுக்கு வாய்ப்புள்ள கடற்கரைப் பகுதிகள்' (Critical Vulnerable Coastal Areas -CVCA) என்றழைக்கப்படும் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

- சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு அனுமதியில்லை: CRZ பகுதிகளில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கு 2011 அறிவிக்கை அனுமதிக்கவில்லை.

- அனுமதி அளிக்கும் முறை: 1991 அறிவிக்கையில் அனுமதியளிக்கும் முறையோ அல்லது எவ்வளவு காலத்திற்குள் அனுமதியளிக்க வேண்டும் என்றோ வரையறை செய்து சொல்லவில்லை. மேலும், அனுமதிகோரி சமர்ப்பிப்பதற்கான எந்தப் படிவமும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. 2011 அறிவிக்கை அனுமதியளிக்கப்படும் முறை என்ன என்பதையும் அனுமதிக்கான காலவரையறைகள் என்ன என்பதையும் குறிப்பிடுகிறது.

- கண்காணிப்பும் அமுலாக்கமும்: அத்துமீறல்களைத் தடுப்பதற்கான அமைப்பு முறை 2011 அறிவிக்கையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அனுமதியளிக்கப்பட்ட பின்னர் கண்காணிப்பதற்கான ஏற்படும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

- வெளிப்படைத் தன்மை: வெளிப்படைத் தன்மையை அதிகப் படுத்துவதற்கும் பொது கலந்தாலோசனைகள் நடத்தவுமான நடவடிக்கைகள் 2011 அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

- கடலரிப்புக்கு வாய்ப்புள்ள இடங்களை இனம் காணுதல்: மனித தலையீடுகளின் காரணமாக கடற்கரையோரங்களின் காணப்படும் சமீபத்திய கடலரிப்புகளின் காரணமாக, கடற்கரை பற்றிய விரிவான அறிவியல் பூர்வமான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று 2011 அறிவிக்கை முன்வைக்கிறது. அந்த ஆய்வு, அதிக அரிப்புள்ள இடங்களில் கடற்கரை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்காக 'மிக அதிக அரிப்புள்ள இடங்கள்', 'நடுத்தர அரிப்புள்ள இடங்கள்' 'குறைவான அரிப்பு அல்லது நிலையான கடற்கரை' என வரையறை செய்யும்.

- குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வளர்ச்சி நடவடிக்கைகள் அனுமதிக்கப்படாத பகுதிகளுக்கு (No Development Zone-NDZ) நிபந்தனைகளைத் தளர்த்துதல்: கடற்கரைவாழ் மக்களுக்கு, குறிப்பாக மீனவ மக்களுக்கு, வளர்ச்சி நடவடிக்கைகள் அனுமதிக்கப்படாத பகுதிகளில் 100 முதல் 200 மீட்டரில் சில நிபந்தனைகளின் கீழ் வாழுமிடங்கள் கட்டிக் கொள்ள/இடித்து கட்டிக் கொள்ள அனுமதியளிப்பது.

## 3. 2011 அறிவிக்கையில் எதிர்க்கப்பட வேண்டிய , பிரச்சனைக்குரிய பகுதிகள் எவை?

- கடல் முகப்பு (foreshore facilities) தேவையில்லாத தொழில் கட்டமைப்புகளுக்கு அனுமதி : மும்பையின் பசுமை விமான நிலையம், அணுமின்சக்தி நிலையம் போன்ற நேரடியாக நீர் முகப்பு தேவையில்லாத அல்லது கடற்கரையில் வசதிகள் தேவையில்லாத செயல்பாடுகள் 2011 அறிவிக்கையின் கீழும் தொடர்ந்து அனுமதிக்கப்படுகின்றன.

- உயர்த்தப்பட்ட இரட்டைத் தூண்கள்/பாலங்கள் மீதான சாலைகளுக்கு அனுமதி: உயர்த்தப்பட்ட இரட்டைத் தூண்கள்/பாலங்கள் மீது சாலைகள் அமைப்பதற்கான ஷரத்துக்களை இவ்வறிவிக்கை கொண்டுள்ளது. ஆனால், அதற்கு என்ன பொருள் என்பதைத் தெளிவுபடுத்தாமல் விட்டுவிடுகிறது. இதுபோன்ற ஷரத்துக்கள் குறிப்பிடத்தக்க தவறான பயன்பாட்டுக்கு வாய்ப்பளிக்கும், அதுமட்டுமல்லாமல் விரைவுப் பாதைகள், மேம்பாலங்கள் போன்றவற்றறை எளிதில் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள சுற்றுச்சூழல் பகுதிகளில் அமைக்க வாய்ப்பளிக்கும். இந்தப் போக்கினை ஏற்கனவே நாம் சென்னையிலும் மும்பையிலும் காண்கிறோம்.

- தேசிய மற்றும் மாநில அளவிலான கடற்கரை ஒழுங்கமைவு மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளில் (CZMAs) மீனவர் பிரதிநிதித்துவம் இல்லை: தேசிய மற்றும் மாநில அளவிலான கடற்கரை ஒழுங்கமைவு மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளில் (CZMAs) மீனவர் பிரதிநிதித்துவம் இல்லை. கடற்கரை ஒழுங்கமைவு மண்டல மேலாண்மை அதிகார அமைப்புகளில் மீனவர் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பது மீனவ சமூகத்தின் நெடுநாள் கோரிக்கையாகும். கடற்கரையின் பலன்களில் உரிமையுள்ளவர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களும் கடற்கரை இயற்கை வளங்களின் இயற்கையான காவல்காரர்களுமான மீனவ மக்கள், கடற்கரை வள ஆதாரங்களை நிர்வாகம் செய்வதில் தங்களின் நியாயமான பாத்திரம் மறுக்கப்பட்டுள்ளது என்று கருதுகிறார்கள்.

  அறிவிக்கையை நடைமுறைபடுத்துவது, கண்காணிப்பதில் உதவுவதற்காக மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் அமைக்கப்படும் மாவட்ட அளவிலான கமிட்டியில் உள்ளூர் மக்களுக்கு, குறிப்பாக மீனவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்குவதை மட்டுமே இந்த அறிவிக்கை செய்துள்ளது.

- வளர்ச்சி நடவடிக்கைகள் அனுமதிக்கப்படாத பகுதிகளில் கட்டுமானம்/புனர் கட்டுமானம் பிரச்சனைக்குரியது: CRZ III பகுதிகளில் உள்ள வளர்ச்சி நடவடிக்கைகள் அனுமதிக்கப்படாத பகுதிகளில் (100 மீட்டருக்கும் 200 மீட்டருக்கும் இடையில்) கடற்கரையோர மக்களுக்கு, குறிப்பாக மீனவ மக்களுக்கு, சில நிபந்தனைகளின் கீழ் வீடுகள் கட்டிக்கொள்ள அல்லது திருத்திக் கட்டிகொள்ள அனுமதியளித்திருப்பது பிரச்சனைக்குரியதாகும். இந்த விதி அனைத்து பாரம்பரிய கடற்கரை வாழ் மக்களுக்கும் பொருந்தும் என்று ஆக்கியது ஓட்டைகளை உருவாக்குகிறது. அதனைத் தவறாகப் பயன்படுத்த முடியும். அதன் காரணமாக CRZ III பகுதிகளில் உள்ள வளர்ச்சி அனுமதிக்கப்படாத பகுதிகளில் கட்டுமானங்களின் நெருக்கம் அதிகமாகி இயற்கை வள ஆதாரங்கள் மீதான சுமை அதிகமாகும். மீனவ மக்கள் தங்கள் தொழிலின் காரணமாக கடற்கரையை ஒட்டித்தான் வாழ வேண்டும் என்பதால், வேறு பகுதிகள் குடியிருக்கக் கிடைக்காத போதுதான் மீனவ மக்களின் அமைப்புகள் மீனவ மக்களின் குடிசைகளை/பகுதிகளை விரிவாக்கம் செய்யும் சலுகைகளைக் கேட்டன.

- CVCA-க்கள் பிரச்சனைக்குரியன: ‘மோசமான பாதிப்புகளுக்கு வாய்ப்புள்ள கடற்கரைப் பகுதிகளுக்கான’ முன்வைப்பு மேலிருந்து கீழ் நோக்கி என்ற நிர்வாக முறையைகொண்டுவரும் என்றும் அத்துடன்

உள்ளூர் மக்கள் அதிகார அமைப்புகளில் பொறுப்பு வகிப்பதையும் நிர்வாகத்தில் பங்கேற்பதையும் குறைக்கப்போவதாகவும் அச்சமேற்படுத்துகின்றன. ஆனால், இதற்கு மாறாக, மக்களால் நிர்வகிக்கப்படும் கடல்சார் உயிர்காப்பகங்களை (Community Managed Coastal Reserves -CMCRs) மீனவ மக்கள் கோரி வந்தனர்.

- மும்பை சேரிகள் மேம்பாடு: மும்மைக்கான தனித்துவமான தீர்வாக அதிக தரை-தள கட்டுமானப் பரப்புள்ள (Floor Space Index-FSI) சேரி மறுமேம்பாடு அனுமதிக்கப்பட்டுள்ளது. கடல் மட்ட உயர்வால் மிக அதிகமாக பாதிப்புக்கு ஆளாகக் கூடிய அலையாத்திகள் உள்ளிட்ட பகுதிகளில் சேரி மறுகட்டமைப்பை அனுமதிப்பது கேள்விக்குரியதாகும். அதிக அளவிலான FSI அளிப்பது சேரிவாழ் மக்களின் பயனுக்காக அல்ல, மாறாக, இதன் மூலம் கிடைக்கும் கூடுதல் அடுக்குமாடிக் குடியிருப்புகளை வெளியாருக்கு விற்று தனியார் கட்டுமான கம்பெனிகள் லாபம் சம்பாதிக்க வாய்ப்பளிக்கத்தான்.

- பிராந்திய EIA-க்கள் தயாரிப்பதற்கு விதிகள் ஏதும் இல்லை: தனித்தனி தொழில் திட்டங்களுக்கு பிராந்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் அடிப்படையில் அனுமதியளிப்பதற்கு 2011 அறிவிக்கையில் எந்தவொரு விதியும் இல்லை. பகுதியின் தாங்கும் திறனை மனதில் கொண்டு தற்போதிருக்கும் தொழில்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்களின் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் தாக்கத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதற்கு அதுபோன்றதொரு விதி அவசியமானதாகும்.

- அடிக்கடி CZMP-க்களை மாற்றியமைப்பது அனுமதிக்கப் படுகிறது: ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை (அல்லது அதைவிட குறைவான காலத்தில்) கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டங்களை (Coastal Zone Management Plans -CZMPs) மாற்றியமைப்பதற்கு இந்த அறிவிக்கை வாய்ப்பளிக்கிறது. அடிக்கடி கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டத்தை மறு வரைவு செய்ய வாய்ப்பளிக்கும் என்பதாலும் கட்டுப்பாடு வரையறைகளை பலவீனப்படுத்தும் என்பதாலும் CZMPக்களை 10 ஆண்டுக்கு ஒருமுறைதான் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மீனவ அமைப்புகள் கேட்டுக்கொண்டிருந்தன.

- **மண்டலங்களை மாற்றியமைப்பது சாத்தியம்:** CRZ III பகுதிகளை (பிரதானமாக கிராமப்புரங்கள்) CRZ II பகுதிகளாக (கட்டுமானங்களுக்கும்

இதர வளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் நிபந்தனைகள் குறைவாக உள்ள கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்ட பகுதி) மாற்றியமைக்க வேண்டும் என்று CZMA-வுக்கு முன்வைப்புகள் வைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதும் இது தொடர்பான மற்றொரு பிரச்சனையாகும். 1991 அறிவிக்கையின் போது CRZ III பகுதிகளை CRZ II பகுதிகளாக மாற்ற வேண்டும் என்று பல முன்வைப்புகள் வந்து அவை ஏற்கப்பட்டன. இதன் காரணமாக கட்டுமானம் நிறைந்த கடற்கரை பகுதிகள் அதிகமாகின. இவ்வாறாக அறிவிக்கையின் நோக்கமே பாழாய் போனது. எனவே, மண்டலங்களை மாற்றியமைக்கும் முன்வைப்புகளை ஆய்வு செய்யும் மாநில/யூனியன் பிரதேச மற்றும் தேசிய CZMA-க்களில் மீனவ மக்களின் பிரதிநிதித்துவம் தேவை என்பதையும் இது வலியுறுத்துகிறது.

## 4. CRZ 2011-ல் மீனவ மக்களுக்குப் பயன் தருவதாக இருக்கக் கூடிய விதிகள் என்ன?

2011 ஆம் ஆண்டின் அறிவிக்கையின் சில விதிகள் மீனவ மக்களுக்குப் பயன் தருவதாக இருக்கக் கூடும். அந்த விதிகளை மீனவ சமூகங்கள் நன்கு தெரிந்துவைத்துக்கொள்வது அவசியமானதாகும்.

### முடிவெடுப்பதில் மீனவ மக்களின் பிரதிநிதித்துவம்

- *மாவட்ட மட்ட பிரதிநிதித்துவம்*: அறிவிக்கை அமுலாக்கத்திற்கும் கண்காணிப்பிற்கும் (பத்தி 6(c)) உதவுவதற்காக, இந்த அறிவிக்கையின்படி மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் அமைக்கப்படவிருக்கும் மாவட்ட மட்ட கமிட்டிகளில் கடற்கரையோர மக்களுக்கு, குறிப்பாக மீனவ மக்களுக்கு பிரதிநிதித்துவத்தை அறிவிக்கை வழங்கியுள்ளது. கண்காணிப்பும் அமுலாக்கமும் மாநில/யூனியன் பிரதேச மட்டத்திலான CZMA-க்களின் அடிப்படையான கடமையாகும்.

### திட்டமிடலில் மீனவ மக்களின் பங்கேற்பு

- **CZMP நடப்புகளின் பங்கேற்பு**: கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டங்களைத் தயார் செய்யும் பல்வேறு கட்டங்களிலும் திட்டம் இறுதியாக ஒப்புதல் அளிக்கப்படுவதற்கு முன்பும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று 2011 அறிவிக்கை குறிப்பிடுகிறது. கடற்கரை மண்டல நிர்வாக திட்டங்களில் உரிமையுள்ளவர்கள் மத்தியிலிருந்து கருத்துக்களைக் கோரிப்பெற்று CZMA-க்கள் உள்ளிணைத்துக்கொள்ள வேண்டும். *[பத்தி 5*

*(ii), (vi), (vii), (viii); பிற்சேர்க்கை 1, பத்தி IV].* இது கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டத் தயாரிப்பில் கடற்கரை வாழ் மக்கள் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளிக்கிறது.

மீனவ கிராமங்களையும் மீனவ மக்களின் பொதுச் சொத்துக்களையும், இதர வாழ்வாதாரங்களையும் (கடல்துறைகள், மீன் காயவைக்கும் இடங்கள் மற்றும் மீனவ மக்கள் மற்றும் இதர உள்ளூர் மக்களின் அடிக்கட்டுமான வசதிகள்) CZMPக்கள் வரைபடமாக்க வேண்டும். *[இணைப்பு I, பத்தி II, 7].* CZMPக்கள் உண்மையான நிலப் பயன்பாட்டு முறையை பதிவு செய்வதை மீனவ மக்கள் உறுதி செய்ய இது ஓர் வாய்ப்பாகும். மற்றவர்கள் மீனவ மக்களை இடம்பெயரச் செய்து நிலத்தைப் பறித்துக்கொள்ள முயலும்போது மீனவ மக்களின் நலன்களைக் காத்துக்கொள்ள அது பயன்படுவதாக இருக்கும்.

- **மீனவ கிராமங்களுக்கான திட்டமிடல்:** விரிவாக்கம் மற்றும் இதர தேவைகள், சுகாதாரம், பாதுகாப்பு, பேரிடர் தயார் நிலை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு கடற்கரை வாழ் மீனவ மக்களுக்கான நீண்ட கால வீட்டுத் தேவைகளுக்கான விரிவான திட்டத்தை மாநில அரசுகள் தயார் செய்ய வேண்டும் என்று கடற்கரை மண்டல நிர்தவாகத் திட்டத்திற்கான பிற்சோர்க்கை கோருகிறது. இதனை நடைமுறைபடுத்துவதற்கும், அவர்களின் கிராமம் திட்டமிட்ட வகையில் வளர்ச்சி காண்பதற்கும் வீட்டு வசதி மேம்படுவதற்கும் மாநில/யூனியன் பிரதேச அரசுகளுடன் இணைந்து மீனவ மக்கள் செயல்படவேண்டிய தேவையிருக்கிறது. *[பிற்சேர்க்கை 1, பத்தி II (7)].*

**மீனவ மக்கள் குடியிருப்புகள் மற்றும் அது தொடர்பான பிரச்சனைகள்**

- **குடியிருப்புகள் முறைறைபடுத்துவது :** CRZ 1991 அறிவிக்கையின் கீழ் அனுமதிக்கத் தக்க வீடுகள் இதுவரை முறையான அனுமதி பெற்றிருக்கவில்லை என்றால், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவை முறைமைபடுத்தப்படும்: (i) அவை எந்தவித வணிகச் செயல்பாட்டுக்கும் பயன்படுத்தப்படக் கூடாது. (ii) மேலும் அவை பாரம்பரிய மீனவர் அல்லாதவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கவோ அல்லது மாற்றியளிக்கப்பட்டிக்கவோ கூடாது. *[பத்தி 6 (d)].*

முறைமைபடுத்துவதற்கான இந்த விதி மீனவ மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

- **வீடுகளை இடித்துக்கட்டுவது/ பழுதுபார்ப்பது:** CRZக்குள் நகர் மற்றும் கிராமப்புர திட்டமிடல் விதிகளுக்கு பொருத்தமாக உள்ளூர் மக்களின், குறிப்பாக மீனவ மக்களின் வீடுகளை இடித்துக் கட்டுவது அல்லது பழுதுபார்ப்பது அனுமதிக்கப்படுகிறது. *[பத்தி 3 (e)].*

- **CRZ III பகுதியில் 200 முதல் 300 மீட்டருக்குள் அமைந்த வீடுகளை கட்டுவது/இடித்துக்கட்டுவது:** மரபு உரிமைகள், தொடர்சியான பயன்பாடு என்ற எல்லைக்குள் இருக்கும் என்றால் 200 முதல் 500 மீட்டருக்குள் அமைந்துள்ள வீடுகளைக் கட்டுவது/இடித்துக் கட்டுவது 1991 அறிவிக்கையின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் நகர் மற்றும் கிராமப்புர திட்டமிடல் விதிகளுக்கு உட்பட்டு ஒட்டுமொத்த உயரம் 9 மீட்டருக்கு மிகாமல் (தரை மற்றும் முதல் தளத்துடன்) இரண்டு அடுக்குகளுக்கு மிகாமல் கட்டுவது/இடித்துக் கட்டுவதற்கு கட்டுமான அனுமதி உண்டு. *[பத்தி 8, III (CRZ III), B (vii)].* இருந்தபோதும், கட்டுமானம்/இடித்துக் கட்டுவதற்கான இதர நிபந்தனைகள் தளர்த்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள வீடுகளின் எண்ணிக்கையை விட மொத்த வீடுகளின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கு மேலாக இருந்தால் மட்டும், அனைத்து தளங்களின் பரப்பு தரைப்பகுதியின் 33 சதத்தைத் தாண்டக்கூடாது, அப்போது மட்டுமே அனுமதியளிக்கப்படும் என்ற நிபந்தனைகளை 2011ன் அறிவிக்கை கொண்டிருக்கவில்லை.

- **CRZ IIIல் NDZ தொடர்பான விதிகளில் தளர்வுகள் கொண்டு வருதல்:** பாரம்பரிய கடற்கரை வாழ் மக்களுக்கு, குறிப்பாக மீனவ மக்களுக்கு NDZ பகுதியில் 100 மீட்டர் முதல் 200 மீட்டருக்குள் குடியிருப்புகள் கட்டுவதற்கு/இடித்துக் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாரம்பரிய கடற்கரை வாழ் மக்களுடன், குறிப்பாக மீனவ மக்களுடன் கலந்தாலோசனை செய்து, சுகாதாரம் மற்றும் பேரிடர் நிர்வாக அம்சங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டத்தை அது அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். *[பத்தி 8, III (CRZ III), A (ii)].* இருந்தபோதும், ஏற்கனவே குறிபிட்டது போல எச்ரிக்கையுடன் செயல்பட வேண்டும். ஏனென்றால், NDZ-ஐத் தளர்த்துவது 100 முதல் 200 மீட்டர்

வரையிலான பகுதியில் அதிகமான கட்டுமானம் வருவதற்கான ஓட்டையாக அமைந்துவிடக்கூடும்.

- **NDZ-ல் வசதிகள் :** CRZ IIIல் உள்ள NDZ பகுதியில், உள்ளூர் மக்களின் தேவைக்கான மீன் காயவைக்கும் இடங்கள், மீன் ஏலமிடும் இடங்கள், வலை பழுதுபார்க்கும் இடங்கள், பாரம்பரிய படகு கட்டும் இடங்கள், பனிக்கட்டி ஆலைகள், பனிக்கட்டி அறைக்கும் இடங்கள், மீன் பதனமிடும் இடங்கள் போன்ற கட்டுமான வசதிகள் செய்து தருவதை 2011 அறிவிக்கை அனுமதிக்கிறது. *[பத்தி 8, III (CRZ III), A (iii) (I)].*

  உள்ளூர் மக்களுக்குத் தேவையான மருத்துவமனைகள், பள்ளிகள், பொது மழைக்கூடங்கள், பொதுக் கழிப்பறைகள், பாலங்கள், சாலைகள், குடிநீர் வழங்களுக்கான அமைப்புகள், மழைநீர் வடிகால், கழிவோடைகள், சுடுகாடுகள், கல்லறைகள், உப மின்நிலையங்கள் போன்றவை CZMA-வால் ஒவ்வொரு விவகாரமும் தனித்தனியாக பரிசீலனை செய்யப்பட்டு அனுமதிக்கப்படும். *[பத்தி 8, III (CRZ III), A (iii) (j)].*

- **மும்பையின் பாரம்பரிய மீனவ மக்கள் வாழ் பகுதிகளுக்கான (*koliwadas*) சிறப்பு விதிகள்:** மகா மும்பைக்கான சிறப்பு ஏற்பாடாக, கொலிவாடா என்றழைக்கப்படும் பாராம்பரிய மீனவ குடியிருப்பு பகுதிகள் வரைபடமாக்கப்பட்டு CRZ II பகுதிகளாக அறிவிக்கப்படும் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், மீனவ குடியிருப்புகள் கட்டுவது/பழுதுபார்ப்பது முன்னுரிமை ரீதியில் அனுமதிக்கப்படும். பாரம்பரிய பகுதிகளில் வாழும் மும்பை மீனவர்கள் அவற்றின் மீதான தங்கள் உரிமையைத் தக்க வைத்துக்கொள்ள இந்த விதிகள் பயன்படும். மீனவ கிராமங்களுக்கான நீண்ட கால வளர்ச்சித் திட்டங்களுடன் இந்த விதிகள் இணையும் போது, சேரிப் பகுதிகள் வளர்ச்சித் திட்டங்களின் கீழ் வராமல் வளர்ச்சி காண்பதற்கான நல்ல வாய்ப்பு கொலிவாடக்களுக்கு இருக்கிறது.

## தகவல் பெறுவது

- **தகவல் பெறுவது** : CZMP-க்கள், அனுமதியளிப்பு, நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டது குறித்த அறிக்கை, அத்துமீறல்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, CRZ தொடர்பான நீதிமன்ற உத்தரவுகள் தொடர்பான

அனைத்துத் தகவல்களும் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வகையில் இருக்க வேண்டும் என்று 2011 அறிவிக்கை தெரிவிக்கிறது. சம்பந்தப்பட்ட CZMA-வுக்கு எழுதி CRZ தொடர்பான எந்தத் தகவலையும் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு மாநிலத்தின் அல்லது யூனியன் பிரதேசத்தின் CZMA-வும் மேற்சொன்ன விவரங்கள் அவற்றுடன், கூட்டங்களின் விவாதப்பொருள், எடுக்கப்பட்ட முடிவுகள், கொடுக்கப்பட்ட அனுமதிகள் உள்ளிட்ட விவரங்களையும் வெளியிடுகின்ற தனியானதொரு வலைமனையை நடத்திவர வேண்டும். மாநில/யூனியன் பிரதேச வலைமனைகளைத் தொடர்ந்து பார்வையிட்டு அந்த விவரங்கள் நடைமுறையில் அளிக்கப்படுகின்றனவா என்று கண்காணித்து வருவதுடன் கிடைக்கும் விவரங்களைப் பயன்படுத்தவும் வேண்டும். *[பத்தி 4.2 (vi)].*

## கடற்கரை நீர்ப்பகுதி மற்றும் உயிர்ச்சூழல் மாசுபாட்டையும் சீரழிவையும் கட்டுப்படுத்துவது

- CRZ IV-க்குள் 12 கடல் மைல்கள் வரையிலான இந்திய எல்லை கடலும் ஓதத்தால் பாதிக்கப்படும் நீர் நிலைகளும் அடங்கும். இந்தப் பகுதியின் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடிய செயல்பாடுகளை இந்த அறிவிக்கை கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக, சுத்திகரிக்கப்படாத சாக்கடை நீர், கழிவு நீர், சமநிலைத் தொட்டி நீர்[1], கப்பல் கழுவுவது, நிலக்கரிச் சாம்பல் அல்லது அனைத்து திடக் கழிவுகள், நீர்வாழ் உயிரின வளர்ப்புக் கழிவுகள் தடைசெய்யப்பட்டுள்ளன. எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆய்வுகள், துரப்பனம், தோண்டுதல், படகுத் வீடுகள் மற்றும் CRZ IV பகுதியில் கப்பல் பயணம் போன்றவையும் கட்டுப்படுத்தப்படும். *[பத்தி 8, IV (a) and (b)].*

  அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து (ஜனவரி 06, 2011) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலகட்டத்துக்குள் ஆலைகள், நகரங்கள், பெருநகரங்கள் மற்றும் இதர மனிதக் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து

---

[1] சமநிலைத் தொட்டி நீர் (ballast water): கப்பல்களின் சமநிலையை வலுப்படுத்துவதற்காக, கப்பலின் அடிப்பகுதியில் கடல் நீர் நிரப்பப்படும். அவ்வாறு ஓர் கடற்கரைப் பகுதியில் நிரப்பப்படும் நீர் மற்றொரு கடல் பகுதியில் வெளியேற்றப்படும்போது, அந்த நீரில் உள்ள அயல் (Exotic) உயிரினங்கள், இதர பொருட்கள் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் என்பதால் அவ்வாறு வெளியேற்றுவது கட்டுப்படுத்தப்படுகிறது. - (மொழி பெயர்ப்பாளர்)

சுத்திகரிக்கப்படாத கழிவுகளையும் கழிவு நீரையும் வெளியேற்றுவதை நிறுத்த வேண்டும் என்று இந்த அறிவிக்கை கோருகிறது. மேலும் அறிவிக்கை வெளியிடப்பட்ட ஓர் ஆண்டுக்குள் கட்டுமான சிதைவுகள், நிலக்கரிச் சாம்பல் போன்றவற்றைக் கொட்டுவதை நிறுத்த வேண்டும்.

கடற்கரை நீர் மாசுபடுவதும் கடல் சுற்றுச்சூழல் மாசுபடுவதும் மீனவ மக்களுக்குப் பெரும் பிரச்சனையாக இருப்பதால், இந்த விதிகள் நடைமுறைபடுத்தப்பட்டால் அது மிகுந்த பயன் தருவதாக இருக்கும். இதுபோன்ற மாசுபடுத்தல்களையும் கொட்டுவதையும் கண்காணித்து அனைவரின் கவனத்திற்கும் கொண்டுவருவதற்கு மீனவ மக்கள் மிக முக்கிய பாத்திரம் ஆற்றியாக வேண்டும்.

## 5. அத்துமீறல்களைக் கண்காணிப்பதில் மீனவ மக்கள் பாத்திரம் வகிப்பது எப்படி?

மீனவ மக்கள் கடற்கரைப் பகுதிகள் முழுமையிலும் பரந்து வாழ்கிறார்கள். கடற்கரையிலும் கடற்கரை அருகே கடலிலும் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது அவர்களுக்கு, யாரைவிடவும், எளிது. கடற்கரை உயிர்ச்சூழல் சிறப்பாகப் பாதுகாக்கப்படும் வகையில் CRZ 2011 அறிவிக்கை பயன்தரும் விதத்தில் நடைமுறைபடுத்தப்படுவது அவர்களுக்கு மிகவும் தேவையானதாக இருக்கிறது. 1991 அறிவிக்கை மிகவும் மோசமாக நடைமுறைபடுத்தப்பட்டது மிக அதிகமாக சட்ட விரோத வளர்ச்சி நடவடிக்கைகள் கடற்கரையில் நிகழவும் மீனவ மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் வகையிலும் அமைந்தது என்பது அனைவரும் அறிந்ததே. அது திரும்பவும் நிகழாமல் இருக்க மக்கள் விழிப்பாக இருப்பது அவசியமானதாகும்.

CRZ 2011 அறிவிக்கையின் முக்கியமான அம்சங்களை மக்கள் அறிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். SCZMA-க்களிடம்கோரி கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். புதிய கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டங்கள் உருவாகும் வரை 1991 ஆம் ஆண்டு அறிவிக்கையின்படியான கடற்கரை மண்டல நிர்வாகத் திட்டங்கள்தான் பிற்பற்றப்படும் என்று 2011 அறிவிக்கை சொல்வதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

## CRZ I, II and III (கடற்ரை நிலம்) அத்துமீறல்கள்

தங்களின் கடற்கரைப் பகுதி CRZ I, II அல்லது III என்பதை மனதில் கொண்டு தங்களின் பகுதிக்கு வருகை தரும் பெரிய திட்டங்கள் அல்லது கட்டுமானங்கள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். எந்தவொன்றாவது CRZ அறிவிக்கை 2011ஐ மீறுவதாக இருக்கும் என்று சந்தேகம் ஏற்பட்டால், பின்வருனவற்றை உள்ளிட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்:

- கம்பெனியின் பெயர்/ அரசுத் துறை அல்லது முகமை அல்லது தனியார் கம்பெனி மற்றும் அவை வரப்போகும் பகுதி (சர்வே எண்) எது என்பது பற்றிய சரியான தகவல் உள்ளிட்ட விவரங்களைச் சேகரியுங்கள்.

- CZMA அந்தத் திட்டத்தற்கு அனுமதி அளித்துள்ளதா என்று பாருங்கள். 2011 அறிவிக்கையின் படி அனுமதியளிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்கள் பற்றிய விவரங்களும் மாநில/ யூனியன் பிரதேச CZMA வலைமனையில் வெளியிடப்பட வேண்டும். அதுபோன்ற அனுமதி ஏதும் காணப்படவில்லை என்றால், சம்பந்தப்பட்ட CZMAவைத் தொடர்பு கொண்டு விளக்கம் கேளுங்கள், சம்பந்தப்பட்ட விவரங்களை வலைமனையில் உடனடியாக வெளியிட வேண்டும் என்று கோருங்கள்.

- அனுமதியளிக்கப்படவில்லை என்றால், அல்லது வேறு வார்த்தைகளில் அத்தொழில் திட்டம் சட்ட விரோதமானது என்றால், சம்பந்தப்பட்ட கடற்கரை மண்டல நிர்வாக ஆணையத்திற்கும் அதுபோல, சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்திற்கும் புகார் செய்யுங்கள். அதன் பிரதிகளை NFF பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வையுங்கள்.

- அனுமதியளிக்கப்பட்ட தொழில் திட்டமொன்றில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறுவதாகவும் கூட அது இருக்கலாம். எனவே, கொடுக்கப்பட்ட அனுமதியின் நகல் ஒன்றைப் பெறுவதும், நிபந்தனைகள் மீறப்படுகின்றனவா என்று பார்ப்பதும் கூட முக்கியமானது.

- CRZ அறிவிக்கையின் விதிகளை மீறி அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சந்தேகப்படுவீர்கள் என்றால், (CZMP-யைப் படித்துப் பாருங்கள்) கடற்கரைச் சுற்றுச்சூழல் மீது அந்தத் தொழில் திட்டம் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதுவீர்கள் என்றால், நடந்துகொண்டிருக்கும் தொழில் திட்டத்தின் தன்மை, அத்திட்டத்தால்

தற்போது ஏற்பட்டிருக்கும்/ ஏற்படப் போகும் பாதிப்புகள், அத்துமீறல்கள் பற்றிய புகைப்படங்கள், கூகுள் எர்த் (Google Earth) பயன்படுத்தி அந்தப் பகுதியைப் பற்றி உருவாக்கப்பட்ட வரைபடம் ஆகிய விவரங்களைச் சேகரித்து உங்கள் வாதத்தைப் வலுப்படுத்தி அத்துமீறல் நடந்திருக்கிறது என்பதை நிரூபிக்க முயற்சி எடுங்கள்.

- அனைத்து புகார்களும் சம்பந்தப்பட்ட மாநில/யூனியன் பிரதேச கடற்கரை மண்டல நிர்வாக ஆணையத்திற்கும் அதுபோல, சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்திற்கும் புகார் செய்யுங்கள். அதன் பிரதியை NFF பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வையுங்கள். இது தொடர்பான முகவரிகள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.
- மாநில CZMA, கிராமப் பஞ்சாயத்து, அல்லது நகராட்சி, சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் ஆகியவற்றிடமிருந்து தகவல் பெறுவதில் ஏதேனும் சிரமங்கள் இருந்தால், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்துங்கள்.

## CRZ IV பகுதியில் அத்துமீறல்கள் (உள்நாட்டுக் கடல் பகுதி மற்றும் ஓதத்தால் பாதிக்கப்படும் கடற்கரை நீர்நிலைகள்)

கடற்கரை கடல் நீரில் (கழிவுகளை இன்ன பிறவற்றை) கொட்டுவது, மாசுபடுத்துவது போன்ற நிகழ்வுகளை எச்சரிக்கையுடன் கவனித்து வர வேண்டும். அதுபோன்ற அனைத்து விவகாரங்கள் தொடர்பாகவும் (குறிப்பாக புகைப்படம், வாகன எண் அல்லது கப்பலின் பெயர், எந்த இடத்தில் நிகழ்ந்தது போன்ற விவரங்களுடன்) மாநில/யூனியன் பிரதேச CZMA மற்றும் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்திடம் புகார் செய்து நடவடிக்கை கோர வேண்டும்.

## CRZ அறிவிக்கை 1991 அத்துமீறல்கள்

பின்வருவனவற்றைச் செய்வதற்காக, சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம் 1986ன் பிரிவு 5-ன் கீழ் (குறிப்பாணை (memo )எண். 11-83/2005-IA-III dt.25.1.2001) அனைத்து மாநில/ யூனியன் பிரதேச கடற்கரை மண்டல நிர்வாக ஆணையங்களுக்கும், ஜனவரி 25, 2011 அன்று சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம் அறிவுறுத்தல் வழங்கியது:

(அ) இந்த அறிவுறுத்தல் பெறப்பட்ட நான்கு மாத காலத்துக்குள் கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அறிவிக்கை 1991 மற்றும் அதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடற்கரை மண்டல நிர்வாகத் திட்ட அத்துமீறல்களை இனம் காண்பது.

(ஆ) அதற்குப் பிந்தைய நான்கு மாத காலத்துக்குள் இனம் காணப்பட்ட அத்துமீறல்களுக்கு எதிராக சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டம் 1986ன் படி நடவடிக்கைகளைத் துவக்குவது

(இ) இனம் காணப்பட்ட அத்துமீறல், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் மேலே கண்ட (அ) மற்றும் (ஆ) பத்திகளுக்கு இனங்க, தத்தமது வலைமனைகளில், ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்க ஒரு முறை, வெளியிட வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களை சுட்டிக் காட்டுவதற்கும் மாநில/யூனியன் பிரதேச கடற்கரை மண்டல நிர்வாக ஆணையங்களும் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகமும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று கோருவதற்கும் இது நல்ல வாய்ப்பு வழங்குகிறது.

நாம் முன்பு சொன்னது போல எந்த அளவு முடிகிறதோ அந்த அளவுக்கு அத்துமீறல்கள் பற்றிய விவரங்களைச் சேகரியுங்கள். அந்த விவரங்களை மாநில/யூனியன் பிரதேச கடற்கரை மண்டல நிர்வாக ஆணையத்திற்கும் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகத்திற்கும் புகாராக அனுப்புங்கள். அதன் நகலை NFF -ன் பொதுச் செயலாளருக்கு அனுப்புங்கள்.

## *இணைப்பு*

**முக்கியமான வலைமனைகளும் முகவரிகளும்**

**<u>வலைமனைகள்</u>**

**<u>அரசு முகமைகள்:</u>**

தேசிய அளவில்: சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம்

*www.moef.nic.in*

*http://envfor.nic.in/legis/crz.htm*

*http://moef.nic.in/modules/others/?f=press-releases*

*http://moef.nic.in/modules/public-information/orders-guidelines/*

மாநில அளவில்:

| | |
|---|---|
| குஜராத்: | *http://gujenvfor.gswan.gov.in/e-citizen/e-citizen-clearances.htm* |
| டாமன் & டையூ : | www.daman.nic.in |
| மகாராஷ்டிரம்: | http://mczma.maharashtra.gov.in/ |
| | http://envis.maharashtra.gov.in/ |
| | http://envis.maharashtra.gov.in/envis_data/?q=mczma_s |
| கர்நாடகம்: | http://parisara.kar.nic.in/ |
| கேரளா: | http://www.kerenvis.nic.in/kczma/ |
| தமிழ்நாடு: | http://www.tnenvis.nic.in/crz_noti_coastal.htm |
| புதுச்சேரி: | http://dste.puducherry.gov.in/PCZMAHOME.htm |
| மேற்கு வங்கம்: | http://wbsczma.gov.in/ |
| | http://enviswb.gov.in/ |

<u>முகவரிகள்</u>

<table>
<tr><td>சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம்<br>பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்</td><td colspan="2"><u>தெற்கு பிராந்தியம், பெங்களூரு</u><br>Shri K. S. Reddy<br>Chief Conservator of Forests (Central)<br>Kendriya Sadan, 4th Floor,<br>E&F Wing, II Block Koramangala, Banglore-560034<br>T.No.080-25537184<br>Fax No.080-25537184<br><u>கிழக்குப் பிராந்தியம், புவனேஷ்வர்</u><br>Shri J. K. Tewari<br>Chief Conservator of Forests (Central)<br>A/3, Chandersekharpur, Bhubaneswar-751023<br>Ph.0674-2301213<br>Fax.0674-2302432<br><u>மேற்கு பிராந்தியம், போபால்</u><br>Shri A. K Rana<br>Chief Conservator of Forests (Central)<br>Kendriya Paryavaran Bhavan,<br>Link Road No.3,<br>Bhopal-462016<br>Ph.0755-2465494</td></tr>
<tr><td>தேசிய கடற்கரை மண்டல நிர்வாக ஆணையம்<br>(National Coastal Zone Management Authority)</td><td colspan="2">Chairman, National Coastal Zone Management Authority,<br>Ministry of Environment and Forests,, Govt. of India,<br>Paryavaran Bhavan, CGO Complex, Lodhi Road,<br>New Delhi- 110003</td></tr>
<tr><td colspan="3">மாநில கடற்கரை மண்டல நிர்வாக ஆணையங்கள் (State Coastal Zone Management Authorities)</td></tr>
<tr><td colspan="2">குஜராத்</td><td>The Chairman, Gujarat State Coastal Zone Management Authority and Principal Secretary, Forests and Environment Department,<br>Block No 14,8th Floor, Sachivalaya,<br>Gandhi Nagar- 382010, Gujarat.<br>Member Secretary, Gujarat Coastal Zone Management Authority, & Director,<br><br>Forests and Environment Department, Forests & Environment Department,<br>Block No.14, 8th Floor, Sachivalaya,<br>Gandhinagar - 382010</td></tr>
</table>

| | |
|---|---|
| டாமன் & டையூ | Chairman, Daman & Diu Coastal Zone Management Authority & Administrator, Daman & Diu, Daman- 396210<br>The Deputy Conservator of Forests, Office of the Deputy Conservator of Forests , Administration of Daman & Diu, Daman- 396210 |
| மகாராஷ்டிரம் | The Chairman,<br>Maharashtra Coastal Zone Management Authority,<br>Environment Department,<br>15th Floor, New Administrative Building Opposite Manthralaya,<br>Madam Cama Road,<br>Mumbai- 400020<br>Member Secretary, Maharashtra Coastal Zone Management Authority,<br>Environment Department, Deputy Secretary,<br>15th Floor, New Administrative Building Opposite Manthralaya,<br>Madam Cama Road,<br>Mumbai- 400020 |
| கோவா | Chairman, Goa State Coastal Zone Management Authority and Chief Secretary,<br>Panjim, Goa.<br>The Member Secretary, Goa Coastal Zone Management Authority, Government of Goa,<br>Department of Science, Technology and Environment,<br>Opp. Saligao Seminary, Saligao, Goa-403511. |
| கர்நாடகம் | The Chairman, Karnataka State Coastal Zone Management Authority and Principal Secretary, Department of Forest, Ecology and Environment,<br>Government of Karnataka,<br>Multistoried Building, K G Road,<br>Banglore- 560001<br>Member Secretary, Karnataka State Coastal Zone Management Authority, & Director, Environment Technical Cell, Department of Forest, Ecology and Environment, Government of Karnataka,<br>Multistoried Building, K G Road,<br>Banglore- 560001 |
| கேரளா | The Chairman<br>Kerala State Coastal Zone Management Authority,<br>Sasthra Bhavan, Pattom,<br>Thiruvananthapuram- 4<br>Member Secretary, Kerala State Coastal Zone Management Authority, and the Director, Science, Technology and Environment Council,<br>Sasthra Bhavan, Pattom, Thiruvananthapuram- 4 |

| | |
|---|---|
| லட்சத் தீவுகள் | Chairman, Lakshadweep Coastal Zone Management Authority & Administrator, Administration of UT of Lakshadweep,<br>Kavaratti- 682555<br><br>The member Secretary, Pollution Control Board and Lakshadweep Coastal Zone Management Authority,<br>Administration of UT of Lakshadweep,<br>Kavaratti- 682555 |
| தமிழ்நாடு | தலைவர், தமிழ்நாடு கடற்கரை மண்டல நிர்வாக ஆணையம் மற்றும் முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, முதல் தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-600 015 தமிழ்நாடு<br><br>உறுப்பினர் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, முதல் தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை-600 015 தமிழ்நாடு |
| புதுச்சேரி | தலைவர், புதுச்சேரி கடற்கரை மண்டல நிர்வாக ஆணையம் மற்றும் முதன்மை செயலாளர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வீட்டுவசதி வாரிய துறை, புதுச்சேரி-605 001<br><br>உறுப்பினர் செயலாளர், புதுச்சேரி கடற்கரை மண்டல நிர்வாக ஆணையம் மற்றும் முதன்மை செயலாளர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வீட்டுவசதி வாரிய துறை, புதுச்சேரி-605 001 |
| அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் | Chairman, Andaman and Nicobar Coastal Zone Management Authority,<br>Principal Conservator of Forest,<br>Andaman and Nicobar Islands Administraton,<br>Chatham, Port Blair- 744102<br><br>The Conservator of Forests, and Member Secretary, Andaman and Nicobar Coastal Zone Management Authority, Andaman and Nicobar Islands Administraton,<br>Chatham, Port Blair- 744102 |
| ஆந்திர பிரதேசம் | Chairman, Andhra Pradesh State Coastal Zone Management Authority and Additional Chief Secretary, Government of Andhra Pradesh,<br>Environment, Forests, Science and Technology Department,<br>Secretariat, Hyderabad- 500022<br>Member Secretary, Andhra Pradesh State Coastal Zone Management Authority,<br>Government of Andhra Pradesh,<br>Environment, Forests, Science and Technology Department,<br>Secretariat, Hyderabad- 500022 |

| | |
|---|---|
| ஒரிசா | Chairman, Orissa State Coastal Zone Management Authority and Principal Secretary, Science, Technology & Environment and Forests Wing,<br>Orissa Secretariat,<br>Bhubaneshwar – 751001<br><br>The Member Secretary, Orissa State Coastal Zone Management Authority and Director, Science, Technology & Environment and Forests Wing,<br>Orissa Secretariat,<br>Bhubaneshwar – 751001 |
| மேற்கு வங்கம் | Chairman , The Secretary, Department of Environment, Government of West Bengal,<br>Writers Building, G Block,<br>Second Floor, Kolkatta- 700 001<br><br>Member Secretary, West Bengal Pollution Control Board & Member Secretary, West Bengal Coastal Zone Management Authority,<br>West Bengal Pollution Control Board,<br>Paribesh Bhavan,10 A, Block-L.A, Sector III,<br>Salt Lake<br>City, Kolkata - Zoo o98. |

**தேசிய மீன் தொழிலாளர்கள் அமைப்பு (NFF) முகவரி மற்றும் தொடர்பாளர்:**

Mr. Pradip Chatterjee
20/4 Sil Lane,
Kolkata,
West Bengal,
India
Email: pradipdisha@gmail.com
www.coastalcampaign.


TAMIL NADU
Thiruvallur
Chennai
Vellore
Kancheepuram
Tiruvanamalai
Dharmapuri
Vilu-
ppuram
P
Salem
Erode
The Nilgiris
Cuddalore
Namakkal
Perambalur
Coimbatore
Nagapattinam
Ariyalur
Tiruchira
ppalli
Karur
P
Thanjavur
Thiruvarur
Pudu-
kkottai
Dindigul
Nagapattinam
Theni
Madurai
Siva-
ganga
Virudhunagar
Ramanathapuram
Toothukudi
Tirunelveli
Kanniyakumari